# இந்து நாகரிகம்

## புதிய பாடத்திட்டம்

## தரம் - 12,13

(2017 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை

மொழிகள் மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

# 1.0 அறிமுகம்

கல்வி என்னும் எண்ணக்கருவானது அண்மைக்காலத்திலே மனித விருத்திக்கான சிந்தனைகளைச் சுட்டிக் காட்டுகின்றது. உலகின் பல்வேறு துறைகளிலும் துரித மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் கட்டிளமைப்பருவ மாணவர்கள் தமது அன்றாட வாழ்வில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். இந்நிலையில் இவற்றை வெற்றி கொள்வதற்குத் தேவையான ஆளுமை உடையவர்களாக மாணவர்களை ஆக்குவது இப்புதிய கலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்து நாகரிகப்பாடநெறியானது இலங்கையின் தேசிய கல்வி இலக்குகளையும் தேர்ச்சி மையக் கற்றல் கற்பித்தல் தொழிற்பாடுகளையும் இணைத்துக் கொண்டுள்ளது. அத்துடன் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்தலும், அதனூடாக அவர்களது ஆளுமையை விருத்தி செய்தலும் இப்பாடநெறி மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் இக்கலைத்திட்டமானது, நடைமுறை வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படையான தேர்ச்சிகளை வழங்கி, மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதைப் பிரதான நோக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன்,

- இறைநம்பிக்கை
- சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தல்
- சமயச் சடங்கு முறைகளுக்கு மதிப்பளித்தல்
- அழகியல் ரசனையை விருத்தி செய்தல்
- பாரம்பரியங்களை மதித்துப் பின்பற்றிப் பாதுகாத்தல்
- இந்து சமய நம்பிக்கை
- மரபுவழிப் பண்பாடுகளைப் பேணுதல்
- சமூக, பொருளாதார, அறநெறிகளைக் கடைப்பிடித்தல்
- சமூக நல்லிணக்கத்தில் பங்கு கொள்ளல்

என்பவற்றினூடாக மாணவர்களை நல்ல மனப்பாங்குடையவர்களாகவும் நற்பிரசைகளாகவும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு இப்பாடநெறி உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய கல்வி முறைமை ஒன்றை வலியுறுத்தும் பாங்கில், அதன் இலக்குகளும் தேர்ச்சிகளும் வலியுறுத்தப்பட்டுள்ளன. அதேவேளை இந்துக்கள் தமது சொந்தப் பெறுமானங்களை விருத்தி செய்யக் கூடியவாறும் சமய வழிபாடுகளைப் பேணித் தமது பண்பாட்டினை மேம்படுத்தும் நோக்கிலும் இப்பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி இப்பாடநெறியைக் கற்க விரும்பும் அனைவரும் இந்து நாகரிகம் தொடர்பான அடிப்படைக் கருத்துக்களை அறிந்து கொள்ள இப்பாடத்திட்டம் பெரிதும் உதவியாக அமையும்.

இதற்கு முன்னர் கற்பிக்கப்பட்ட இந்து நாகரிப் பாடத்திலிருந்த, தற்போது நடைமுறையில் இல்லாத விடயங்கள் நீக்கப்பட்டு நடைமுறைக்குப் பொருத்தமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்கு தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)*

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில் நுட்பத் தகைமை : கணனி அறிவு கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்துதல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

**சமூகச் சூழல்** : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

**உயிரியல் சூழல்** : வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்:**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 4.0 பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

1. இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் உலக நாகரிகங்களின் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய்வினை மேற் கொள்வார்
2. இந்து நாகரிக வரலாற்றில் பக்தி நெறியாளர்களதும் இந்து சமூக சீர்திருத்த இயக்கங்களதும் பங்களிப்புக்களை அறிந்து மதிப்பளிப்பார்.
3. இலங்கையில் இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியை இனங்கண்டு அவை பற்றிய பகுப்பாய்வினை மேற்கொள்வார்.
4. உலக நாடுகளில் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கம் பெறுவார்.
5. இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் கோயில் கலைகள் வகிக்கும் சிறப்பினை அறிந்து நயக்கும் திறனை விருத்தி செய்வார்.
6. இந்து தத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெறுவார்
7. இந்துசமய சமய தத்துவ சிந்தனையாளர்களதும் அறிஞர்களதும் பணிகளை இனங்கண்டு மதிப்பளிப்பார்
8. மனித வாழ்வு செம்மையாகவும் ஆன்மீக ஈடுபாடு உடையதாகவும் அமைவதற்கு, அறவழியில் மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடுகளை அறிந்து, வாழ்வில் கடைப்பிடிப்பார்
9. இந்து அறிவியலானது வாழ்வியலை மேம்படுத்துமாற்றினை அறிந்து, கடைப்பிடிப்பார்
10. இந்துசமுதாய வளர்ச்சியில் அரசியல், பொருளாதார, கல்வி, பண்பாட்டு பாரம்பரியம் என்பன பெறுமிடத்தை ஆதாரங்களுடன் அறிந்து மதிப்பளிப்பார்

## பாடத்திட்டத்தைப் பாடசாலைத் தவணைக்கேற்ப வகுத்துக் கொள்வதற்கான உத்தேசத் திட்டம்

| தரம் | தவணை | தேர்ச்சி மட்டம் | பாடவேளை |
|---|---|---|---|
| தரம் - 12 | 01 | 1.1, 1.2, 1.3, 1.4 | 100 |
| | 02 | 2.1, 2.2, 3.1, | 100 |
| | 03 | 3.2, 4.1, 5.1 | 100 |
| தரம் - 13 | 01 | 6.1, 6.2, | 100 |
| | 02 | 6.3, 7.1, 7.2, | 100 |
| | 03 | 8.1, 9.1, 10.1 | 100 |

## 5.0 இந்து நாகரிகம் - புதிய பாடத்திட்டம் தரம் -12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1.0 இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும் உலக நாகரிகங்களின் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு, அவை பற்றிய பகுப்பாய்வினை மேற் கொள்வார் | 1.1 நாகரிகம் பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கங்களையும் அவற்றுக்கு இடையிலான தொடர்புகளையும் அறிந்து கூறுவார். | • இந்து நாகரிகம், இந்துப் பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கமும் சிறப்பும் | **இப்பாட அலகை கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• நாகரிகம், பண்பாடு என்பவற்றின் பொருள் விளக்கங்களை அறிந்து கூறுவார்.<br>• நாகரிகம், பண்பாடு என்பவற்றுக்கு இடையிலான தொடர்புகளையும் வேறுபாடுகளையும் பட்டியற்படுத்திக் காட்டுவார்.<br>• பண்பாட்டு அம்சங்களாகிய சமயம், கலை, இலக்கியம், ஒழுக்கம் தொடர்பாடல், மொழி ஆகியவற்றின் இணைப்பே பண்பாட்டு வெளிப்பாடு என்பதை எடுத்துரைப்பார்.<br>• அகராதியில் சமயம், கிரியை,மொழி, கலை,ரசனை,விழுமியம் என்பவை பண்பாட்டம்சங்களாகும் என்பதை ஒப்பீடு செய்து தொடர்புபடுத்துவார்.<br>• பண்பாட்டம்சங்கள், தர்மநெறியையும் வாழ்க்கை முறைகளையும் வெளிப்படுத்தும் எனச் சுட்டிக்காட்டுவார்.<br>• உலகப் பொதுமைக்கான ஒழுக்கக் கருத்துக்களை தோத்திரப் பாடலாதாரங்கள் மூலம் எடுத்துக்காட்டுவார்.<br>• இந்துப் பண்பாட்டில் அறியவேண்டிய பொருள் மரபினை சமயம், கிரியை, பண்பாடு, கலை, தத்துவம் என வேறு பிரித்துக் கூறுவார்.<br>• இந்துப் பண்பாட்டினை வெளிப்படுத்தும் இலக்கியங்களைப் பாடி இரசிப்பார்.<br>• இந்துப் பண்பாட்டின் வரலாற்று மூலங்களைப் பட்டியல்படுத்திக் காட்டுவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.2 உலக நாகரிகங்களில் இந்து நாகரிகத்தின் வகிபங்கை இனங்கண்டு எடுத்துரைப்பார். | • உலக நாடுகளில் இந்து நாகரிகம் - சுருக்கமான அறிமுகம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• உலக நாடுகளில் இந்து நாகரிகத்தின் சிறப்புக்களைத் தேடிப் பெறுவார். உலக நாகரிக வரலாற்றில் இந்திய நாகரிகமும் அடங்கும் எனக் குறிபபிடுவார்.<br>• இந்திய நாகரிகம் மிகப் பழைமையானது எனக் கால கட்டமைப்பில் குறிப்பிடுவார்.<br>• இந்து நாகரிகத்தின் அடிப்படையான தொல்லியற் சின்னங்களை எடுத்துக்காட்டுவார்.<br>• மேலை நாடுகளில் இந்துப்பாரம்பரியங்களை கடைப்பிடிக்கும் சிறப்புக்கள் பற்றி எடுத்துரைப்பார்.<br>• ஏனைய பண்பாடுகளுடன் இந்துப் பண்பாட்டம்சங்களை ஒப்பிடுவார்.<br>• உலகப் பொதுமைக்கான ஒழுக்கக் கருத்துக்களைத் தோத்திரப் பாடலாதாரங்கள் மூலம் எடுத்துக்காட்டுவார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.3 இந்து நாகரிகத்தின் தோற்றம் வளர்ச்சி என்பவற்றை வரலாற்று ஆதாரங்களின் துணை கொண்டு காலகட்டங்களாக எடுத்துரைப்பார் | • இந்து நாகரிகத்தின் மூலங்கள்<br>• தொல்லியற் சின்னங்கள்<br>• இந்து இலக்கியங்கள்<br>• வேதங்கள்<br>• ஆகமங்கள்<br>• இதிகாசங்கள்<br>• புராணங்கள் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்துப் பண்பாட்டின் வரலாற்று மூலங்களைப் பட்டியல்படுத்திக் காட்டுவார்.<br>• இந்து நாகரிகத்தின் தொன்மையை தொல்பொருட் சின்னங்கள், இலக்கியச் சான்றுகள், வெளிநாட்டார் குறிப்புகள் முதலான ஆதாரங்கள் மூலம் அறிந்து கூறுவார்.<br>• சமஸ்கிருத மொழி,தமிழ்மொழி இலக்கியங்களை வேறுபடுத்திச் சொல்லுவார்.<br>• வேத இலக்கியம், இந்துசமய மூல இலக்கியம் என்பதற்கான காரணங்களைக் கூறுவார். அவ்விலக்கியங்கள் எழுந்த சூழலைக் குறிப்பிடுவார்.<br>• ஆகமங்கள் இன்றைய சமய தத்துவ, கலை,வாழ்வியல் விடயங்களுடன் தொடர்பானவை என்பதை எடுத்துக்காட்டுவார்.<br>• இதிகாசங்களும் புராணங்களும் இந்து நாகரிக வளர்ச்சி நெறியில் ஏற்படுத்திய மீள் எழுச்சி விடயங்களைச் சுட்டிக்காட்டுவார்<br>• புராண இதிகாசங்களின் தெய்வீக உண்மைகள் தெய்வீக வடிவக் கதைகள் வழிபாட்டு முறைகள் என்பவற்றை எடுத்துக் கூறுவார்.<br>• இந்து சமூகத்தில் சமுதாய மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக புராண,இதிகாச கதை பற்றிய கூத்து நாடகங்களை எழுதிக்காட்டுவார்.<br>• இந்துசமயம் சார்ந்த தத்துவ உண்மைகளைப் பாமர மக்களுக்கு அறநெறிக் கருத்துக்களை கதைவடிவில் புராணங்கள் எடுத்துக் கூறும் தன்மையை விளக்குவார் | 45 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.4 தமிழகத்தில் சிவன், திருமால், முருகன்,சக்தி ஆகிய கடவுளர்களின் வழிபாடு வளர்ச்சி பெற்றவாற்றை ஆதாரங்களின் துணைக் கொண்டு காலகட்டங்களாக வகுத்துக் காட்டுவார். | • சங்ககாலம்<br>• அறநெறிக்காலம்<br>• பல்லவர் காலம்<br>• சோழர் காலம்<br>• விஜயநகர நாயக்கர் காலம்<br>. | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• தமிழகத்தில் ஏற்பட்ட சமய பண்பாட்டு மாற்றங்களை வெளிப்படுத்துவார்.<br>• சைவ வைணவ நெறிகளின் தனித்துவமான சிறப்பம்சங்களைக் குறிப்பிடுவார்.<br>• சங்ககாலத்தில் இந்துசமய மரபில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுவார். சமஸ்கிருத கலாசாரம் தமிழ் கலாசாரத்தில் கலந்தமைக்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டுவார்<br>• சங்ககால இலக்கியம், பாடல் சான்றுகளில் காணப்படுகின்றமைக்கான ஆதாரம் காட்டுவார்<br>• பல்லவர் காலத்திற்கு முன்பு தமிழ் நாட்டில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்களில் சமண பௌத்த செல்வாக்கும் சமஸ்கிருத பண்பாட்டுக் கலப்பும் காரணம் என்பதைக் குறிப்பிடுவார்.<br>• பல்லவர் காலத் தெழுந்த சைவசமய எழுச்சிகளை யும் நாயன்மார்களது பங்கும் பணியும் பற்றியும் கூறுவார்.<br>• ஆழ்வார்களது பாடல்களையும் வைணவ மீள் எழுச்சியையும் குறிப்பிடுவார்<br>• பல்லவர் காலத்து சைவ அரசர் பெருமைகள், பக்தி மரபில் திருக்கோயில்களின் செல்வாக்குப் பற்றிக் குறிப்பிடுவார்<br>• பல்லவர் காலத்து தொடர்ச்சியான விடயங்களை வெளிப்படுத்தும் விடயங்களே சோழராட்சியில் செல்வாக்குப் பெற்றதாக விளக்குவார்<br>• சோழர்கால அரசியல்,சமயம், சைவ அடியார்கள் வைணவ அடியார்கள் கலை மரபு, இலக்கிய மரபு,தத்துவ வளர்ச்சி என்பவற்றை தனித்தனியாக எடுத்துக் கூறுவார்<br>• விஜய நகர நாயக்கர் கலை,இசை,நாடகங்களைப் பற்றி எடுத்துரைப்பார்<br>• விஜயநகர ஆட்சியில் பண்பாட்டு மாற்றங்களைக் குறிப்பிட்டு, தெலுங்கு,சமஸ்கிருத வரலாறுகள் கலந்தமையைச் சுட்டிக் காட்டுவார்<br>• பல்லவர் சோழர்காலத்தில் விளங்கிய சக்தி,முருக வழிபாடுகள் விஜயநகர ஆட்சியில் மீள் எழுச்சி பெற்றதை எடுத்துக் காட்டுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 2.0 இந்து சமய வரலாற்றில் பக்தி நெறியாளர்களதும் இந்து சமூக சீர்திருத்த இயக்கங்களதும் பங்களிப்புக்களை அறிந்து மதிப்பளிப்பார். | 2.1 வடநாட்டு வைணவ பக்தி நெறியாளர்களின் பங்களிப்புக்களை விளங்கி எடுத்துக் கூறுவார் | • வடநாட்டு வைணவ பக்தி நெறியாளர்கள்<br>- ஸ்ரீ சைதன்னியர்<br>- இராமானந்தர்<br>- மீராபாய்<br>- கபீர்தாசர்<br>- துளசிதாசர் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• பிற சமயங்களின் எழுச்சி இந்து நாகரிக மரபில் பக்தி இயக்கங்கள் தோன்றுவதற்கு முக்கிய காரணம் என்பதைக் கூறுவார்.<br>• தமிழகத்தில் வளர்ச்சி பெற்ற பக்தி நெறி வட இந்திய வைணவ சமய மறுமலர்ச்சிக்கு முன்னோடியாக அமைந்தமையைக் குறிப்பிடுவார்.<br>• வைணவ பக்தி இயக்கத்தின் ஆரம்ப நிலையை பல்லவர் காலத்துடன் தொடர்புபடுத்திக் காட்டுவார்<br>• வட இந்தியப் பக்தி இயக்கத்தின் பின்னணி மற்றும் தோற்றத்தையும் செயற்பாடுகளையும் குறிப்பிடுவார்.<br>• வட இந்தியப் பக்தி நெறியாளர்களையும் அவர்களின் பக்தி வெளிப்பாடு, ரசனை, தத்துவம் பொதுப்பண்புகளையும் பட்டியற்படுத்துவார்.<br>• வட இந்தியப் பக்தி நெறியாளர்களின சிறப்பினையும் அவர்களின் பங்களிப்பினையும் விளக்கிக் கூறுவார்.<br>• மகாராஷ்டிரா பக்தி இயக்க சிந்தனையாளர்களது பெயர்கள், நூல்கள்,பக்தி உறவு முறைகளை பட்டியலாக்கம் செய்வார்<br>• வட இந்தியப் பக்தி இயக்கத்தில் தமிழ் நாட்டு பக்தி இயக்கத்தின் செல்வாக்கினை மதிப்பிடுவார்.<br>• வட இந்தியப் பக்தி இயக்கத்திற்கும் பல்லவர் காலப் பக்தி இயக்கத்திற்கும் இடையில் காணக்கூடிய பொதுப் பண்புகளை ஒப்பிடுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 2.2 இந்து சமூக சீர்திருத்த இயக்கங்களின் பங்களிப்புக்களை விளங்கிக் கூறுவார் | • இந்து சீர்திருத்த இயக்கங்களின் எழுச்சி<br>- பிரம்ம சமாஜம்<br>- ஆரிய சமாஜம்<br>- இராமகிருஷ்ண மிஷன் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• வட இந்தியப் பக்தி இயக்கத்தின் தோற்றத்தையும் செயற்பாடுகளையும் குறிப்பிடுவார்.<br>• சமூக சீர்திருத்த இயக்கம் என்பதன் பொருளை விளங்கி எழுதுவார்.<br>• இந்து சமய,சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியதன் நோக்கம், பணிகள் என்பவற்றை ஒப்பிட்டு நோக்குவதுடன் அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு தாமும் இந்து சமய, சமூகப் பணிகளில் ஈடுபடுவார்.<br>• இந்து சமய, சமூக சீர்திருத்த நிறுவனங்களில் ராஜாராம் மோகன்ராயின் பிரமசமாசமும், தயானந்த சரஸ்வதியின் ஆரியசமாசமும், சுவாமி விவேகானந்தரின் இராமகிருஷ்ண மிஷனும் முக்கியமானவை என்பதை விளக்குவார்<br>• இந்து சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியதன் நோக்கம், பணிகள் என்பவற்றை ஒப்பிட்டு நோக்குவதுடன் அவற்றை முன்மாதிரியாகக் கொண்டு தாமும் இந்து சமய, சமூகப் பணிகளில் ஈடுபடுவார்.<br>• சமூக சமத்துவமே சமய மேம்பாட்டிற்குரிய வழி என்பதைப் போதனையாலும் தமது சமாசத்திலே சாதனையாலும் காட்டியவர். ராஜாராம் மோகன்ரோய் என்பதை விளக்குவார்.<br>• சுய பண்பாட்டியக்கமாக ஆரிய சமாஜம் விளங்கியமைக்கான காரணங்களைக் கூறுவர்.<br>• சுவாமி விவேகானந்தர்,இராமகிருஷ்ண பரமகம்சர் ஆகியோரின்பணிகள் பற்றி எடுத்துரைப்பார் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 3.0 இலங்கையில் இந்து நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியை இனங்கண்டு அவை பற்றிய பகுப்பாய்வினை மேற்கொள்வார். | 3.1 இலங்கையில் இந்துசமய வரலாற்றினை கால அடிப்படையில் சுருக்கமாக விளக்குவார். | **இலங்கையில் இந்து சமய வரலாறு**<br>• புராதன இந்து சமய வரலாறு (வரலாற்றுக்கு முற்பட்ட காலம்)<br>• அனுராதபுரக் காலம்<br>• பொலநறுவைக்காலம்<br>• ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்<br>• 19ஆம் நூற்றாண்டு<br>- ஆறுமுகநாவலர்<br>- விபுலானந்தர்<br>• 20ஆம், 21ஆம் நூற்றாண்டு இந்து சமயம்<br>- அருணாசலதேசிகர்<br>- காசிவாசி<br>- செந்திநாதையர்<br>- கைலாசநாதக் குருக்கள் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• புராதன இலங்கையில் இந்துசமயம் நிலவியது என்பதற்கான வரலாற்று, இலக்கிய மூலாதாரங்களைக் கூறுவார்.<br>• அனுராதபுரத்தை காலவரையறை செய்து கல்வெட்டு, இலக்கியச் சான்றுகளில் அக்கால சமயச் சிறப்புக்களை எடுத்துக் காட்டுவார்.<br>• அனுராதபுர கால இந்து பௌத்த உறவினை கலை, இலக்கிய வழிபாடுகளின் ஊடாகக் குறிப்பிடுவார்.<br>• பொலனறுவைக்கால இலங்கையின் இந்து பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுவார்<br>• தமிழக சோழர் மரபு பொலநறுவைப் பண்பாட்டில் ஏற்படுத்திய பண்பாட்டுத் தாக்கத்தைக் குறிப்பிடுவார்.<br>• பொலநறுவைக் காலத்தில் தமிழக பண்பாட்டுத் தொடர்பு கிழக்கிலங்கையில் பரவிய முறைபற்றி விளக்குவார்<br>• ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழக தொடர்பில் இலங்கையின் யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆட்சி செய்தமையைக் குறிப்பிடுவார்<br>• ஐரோப்பியர்கள் இந்துப்பாரம்பரியத்தில் ஏற்படுத்திய தாக்கம், மாற்றங்களைக் குறிப்பிடுவார்.<br>• நாவலரின் யாழ்ப்பாணச் சமய நிலை முதலான வெளியீடுகளை எடுத்துக் கூறுவார்<br>• விபுலானந்தர் இந்துசமயத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய பணிகளை எடுத்துரைப்பார்<br>• நாவலர் மரபினராகிய காசி வாசி செந்திநாதையர், அருணாசல தேசிகர் பணிகளைக் குறிப்பிடுவார்<br>• தற்கால இந்து நாகரிகத்துறை வளர்ச்சிக்கு பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் பணிகளை விபரிப்பார். | 60 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 3.2 இலங்கையில் சிவாலயங்களின் வரலாறு, வழிபாடு, பண்பாடு தொடர்பான விடயங்கள் பற்றி ஆதாரங்களுடன் அறிந்து அவற்றைப் பாதுகாக்கும் வழிகளை முன்வைப்பார். | • **இலங்கையில் சிவாலயங்களின் வரலாறும் பண்பாடும்**<br>• திருக்கோணேச்சரம்<br>• திருக்கேதீச்சரம்<br>• கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்<br>• முன்னேஸ்வரம்<br>• நகுலேஸ்வரம்<br>• பொலன்னறுவைக் கோயில்கள்<br>• பொன்னம்பலவாணேஸ்வரம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களில் மிகப் பழமையான ஆலயங்களும் உண்டு என்பதை ஆதாரங்கள் மூலம் முன்வைப்பார்.<br>• தரப்பட்ட கோயில்களின் வரலாறு, பண்பாடு தொடர்பான விடயங்களைத் தேடித் தொகுப்பார்.<br>• மேற்படி கோயில்கள் பற்றிய தகவல்களைப் பாதுகாக்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து, அவற்றைப் பாதுகாக்க முன்வருவார்.<br>• ஆலயம் பற்றிய பாடல்களை இசையுடன் பாடுவார். | 30 |
| 4.0 உலக நாடுகளில் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கம் பெறுவார். | 4.1 உலக நாடுகளில் இந்துநாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார். | • **உலக நாடுகளில் இந்து நாகரிகம்**<br>• மலேசியா<br>• கம்போடியா<br>• ஐக்கியராச்சியம்<br>• ஐக்கிய அமெரிக்கா | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• உலகநாடுகளில் இந்து நாகரிகம் பரவியமைக்கான காரணங்களைக் கண்டறிந்து எழுதிக் காட்டுவார்.<br>• இந்து நாகரிகம் பரவிய உலக நாடுகளையும், இந்து நாகரிகம் செல்வாக்குச் செலுத்திய விடயங்களையும் எடுத்துக் கூறுவார்.<br>• குறிப்பிட்ட நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட பல வடமொழிச் சாசனங்களின் இலக்கிய மரபை, சிறப்பாக எடுத்துகாட்டி விளக்குவார்.<br>• மலேசியா, கம்போடியா, ஐக்கியராச்சியம், ஐக்கியஅமெரிக்கா ஆகிய நாடுகளில் இந்துநாகரிகத்தின் தற்கால செல்நெறிகளை எடுத்துரைப்பார்<br>• மேலைநாடுகளில் உயர் கல்விநிலையில் இந்து நாகரிகத்தின் பரம்பலை ஆதாரங்கள் காட்டி விளக்குவாார் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 5.0 இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் கோயில் கலைகள் வகிக்கும் சிறப்பினை அறிந்து நயக்கும் திறனை விருத்தி செய்வார். | 5.1 இந்துக் கோயிற் கலைகளின் சிறப்பம்சங்களை அறிந்து எடுத்துரைப்பார். | • **இந்துக் கோயிற் கலைகளின் அறிமுகம்**<br>• கட்டடக் கலை - தமிழகம்<br>• விக்கிரகக் கலை<br>- நடராஜர்<br>- அனந்தசயனர்<br>• இசைக்கலை<br>- ஆலயங்களில் இசைக்கலை | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்து நுண்கலைகளில் அடங்கும் விடயங்களை எடுத்துக் கூறுவார்.<br>• இந்துக் கோயிற் கலைகளின் சிறப்புக்களை அறிமுகம் செய்வார்<br>• தமிழகத்தில் முக்கியத்துவம் பெற்ற திராவிடக் கட்டடக்கலை தோன்றி வளர்ச்சியடைந்தவாற்றை எடுத்துரைப்பார்.<br>• சிற்ப, நடன, ஓவியக்கலைகளுக்கிடையிலான தொடர்புகளை எடுத்துக் கூறுவார்.<br>• சிற்பங்களின் வகைகள், பிரதிமாலட்சணங்களை விபரிப்பார்.<br>• நுண்கலைகளுக்கும் சமய அனுபவங்களுக்கும் இடையிலான தொடர்புகளை ஒப்பிடுவார்.<br>• சிற்பங்களாக அமையும் வடிவங்களது எல்லா அங்கங்களும் வெளித் தெரியும்படியாக அமைக்கும்போது அது விக்கிரகம் என்பதில் தெளிவு பெறுவார்.<br>• நடராசர் வடிவத்தின் தோற்றம் சிற்ப சாத்திரங்கள் கூறும் அளவுப் பிரமாணங்களின்படி அமைக்கப்படுகிறது பற்றி எடுத்துரைப்பார்.<br>• அனந்தசயன வடிவத்தின் சிற்பசாத்திர முறைமைக்குள் அமைக்கப்பட்டுள்ளது என்பதை விளக்குவார்.<br>• இந்துப் பண்பாட்டு வரலாற்றில் இசைக்கலையானது ஆலயங்களில் மிக உன்னத கலையாக மிளிர்கின்றது என்பதை விளக்குவார். | 50 |

## 6.0 இந்து நாகரிகம் - புதிய பாடத்திட்டம் தரம் -13

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 6.0 இந்து தத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெறுவார். | 6.1 இந்து தத்துவ சிந்தனைகளை அறிந்து, அவற்றை ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார் | • இந்து தத்துவ வளர்ச்சியில்<br>• வேதம், உபநிடதம்<br>• பிரம்மசூத்திரம்<br>• பகவத் கீதை | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்து தத்துவ சிந்தனைகளின் மூலங்களை அறிந்து, அவற்றைத் தொகுத்துக் கூறுவார்.<br>• வேதம், ஆகமம், உபநிடதம், பிரமசூத்திரம், பகவத் கீதை முதலானவற்றில் காணப் படும் தத்துவ சிந்தனைகளை இனங்கண்டு, முன்வைப்பார்.<br>• வேதத்துக்கும் ஆகமத்துக்கும் இடையிலான தொடர்புகளை விளக்கி எழுதுவார்.<br>• பிரஸ்தான திரயங்களுக்கு இடையிலான ஒருமைப்பாட்டினைத் தொடர்புபடுத்திக் காட்டுவார்.<br>• இந்து தத்துவ சிந்தனைகள், பிற்கால தத்துவ சிந்தனைகளுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றமையையும், அவற்றின் உயர்வினையும் விளங்கி, மதிப்பளிப்பார். | 50 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 6.2 வேதாந்த தத்துவ சிந்தனைகளை அறிந்து, அவற்றின் தொடர்புகளை எடுத்துக் கூறுவார். | • **வேதாந்தம் ஓர் அறிமுகம்**<br>• சங்கரர் தத்துவக் கோட்பாடு<br>• இராமானுஜர் தத்துவக் கோட்பாடு<br>• மத்துவர் தத்துவக் கோட்பாடு | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்திய மெய்யியல் சிந்தனை மரபினை வைதீக தத்துவங்கள், அவைதீக தத்துவங்கள் என்ற வகையில் பாகுபடுத்துவார்.<br>• வேதாந்த தத்துவ சிந்தனைகள் பற்றிய விளக்கத்தைக் கூறுவார்.<br>• வேதாந்த தத்துவக் கோட்பாடுகள் தோன்றியமைக்கான பின்னணியைத் தெளிவு படுத்துவார்.<br>• வேதாந்த தத்துவக் கோட்பாடுகளுள் முக்கியம் பெற்ற பிரமம், ஆன்மா, உலகு என்பன பற்றிய கருத்துக்களை இனங்கண்டு விளக்குவார்.<br>• சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகியோரின் கோட்பாடுகளையும் அவற்றுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளையும் ஒப்பிட்டு விபரிப்பார்.<br>• வேதாந்த தத்துவ சிந்தனை வளர்ச்சியில் இக் கோட்பாடுகளின் முக்கியத்துவங்களை அறிந்து மதிப்பளிப்பார்.<br>• இந்து தத்துவ சிந்தனை வளர்ச்சியில் இக்கோட்பாடுகளின் முக்கியத்துவங்களை அறிந்து மதிப்பளிப்பார். | 50 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 6.3 இந்து தத்துவங்களுள் சைவ சித்தாந்தக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை ஆதாரங்களுடன் முன்வைப்பார். | • மெய்கண்ட சாத்திரங்கள் ஓர் அறிமுகம்<br>• சித்தாந்தக் கோட்பாடுகள் (முப்பொருள் உண்மை)<br>- பதி<br>- பசு<br>- பாசம்<br>- முக்தி | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• சைவசித்தாந்தம் என்பதற்கான விளக்கத்தைத் தெளிவாகக் கூறுவார்.<br>• சைவசித்தாந்தத்தின் மூலங்களைத் தொகுத்து எழுதுவார்.<br>• சைவசித்தாந்த சாத்திர நூல்களை ஆசிரியர், பொருள், மரபு என்னும் அடிப்படை யில் விளக்கிக் கூறுவார்.<br>• சைவசித்தாந்தக் கோட்பாட்டில் அடங்கும் முப்பொருள்களை நூல் ஆதாரங்கள், எடுத்துக்காட்டுகள் என்பவற்றின் ஊடாக முன்வைப்பார்.<br>• சைவசித்தாந்தம் கூறும் முத்திக்கான வழிகளை இனங்கண்டு, அதன் பயன்பற்றிக் கூறுவார்.<br>• இந்து தத்துவ சிந்தனைகளில் முக்கியத்துவம் பெறும் 'சைவ சித்தாந்தம்' என்பதன் பொருளை அறிந்து கூறுவார்.<br>• சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் பற்றிய முப்பொருட் கோட்பாடுகளை நூலாதாரங்களின் துணையுடன் முன்வைப்பார்.<br>• சைவசித்தாந்த சாத்திரங்களின் துணையுடன் பதி, பசு, பாசம் பற்றிய கருத்துக்களை விளக்கி எழுதுவார்.<br>• சைவசித்தாந்தம் கூறும் முத்திக் கோட்பாடு ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டு மாற்றை இனங்கண்டு கூறுவார்.<br>• சைவத் திருமுறைகள், அறநூல் என்பவற்றின் துணையுடன் சைவசித்தாந்தம் கூறும் முத்திக்கான மார்க்கங்களை வகைப்படுத்தி எழுதுவார்.<br>• சைவசித்தாந்த மெய்ப்பொருட் கோட்பாடு இந்துக்களின் வாழ்வியலோடு தத்துவ சிந்தனைகளை தொடர்புபடுத்துமாற்றை உணர்ந்து மதிப்பளிப்பதோடு அவற்றைத் தம் வாழ்விலும் கடைப்பிடிக்க முன்வருவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.1 இந்து அற நூல்களின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்துவார். | • இந்து அறவிழுமியங்களும் சாதனைகளும் ஓர் அறிமுகம்<br>• மனுதர்மசாத்திரம்<br>• ஆச்சிரம தர்மங்கள்<br>• புருடார்த்தங்கள்<br>• நீதி நூல்கள் (தமிழ்)<br>- திருக்குறள்<br>- நல்வழி<br>- ஆத்திசூடி | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்து அறவியல் நூல்களையும் அவற்றிலுள்ள அறவியல் சார்ந்த விடயங்களையும் பட்டியற்படுத்துவார்.<br>• இந்து அறவியல் நூல்களுள் மனு தர்மசாத்திரம் பெறும் இடத்தையும் அதன் காலம், உள்ளடக்கம், அரசர்கள், மக்கள் என்போர் மத்தியில் பெற்ற செல்வாக்கு என்பவற்றையும் விளக்கி எழுதுவார்.<br>• ஆச்சிரம தர்மங்களினின்று ஆற்ற வேண்டிய கடமைகள், கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை முறைகள் என்பன பற்றி எடுத்துரைப்பார்<br>• வாழ்வின் இலட்சியத்தை அடைய அறத்தின் வழிநின்று அவ்வழியிலேயே பொருளைத் தேடி வாழ்க்கையினை அனுபவிக்க வேண்டும் என்பதே புருடார்த்தங்களின் குறிக் கோளாகும். இதன் வழி வீடுபேறு சித்திக்கும் என்பதை முன்வைப்பார்<br>• தமிழ்நீதி நூல்களைப் பட்டியற்படுத்தி, அவற்றுள் திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்னும் நூல்கள் மக்கள் மத்தியில் பெறும் முக்கியத்துவத்தையும் விபரிப்பார்.<br>• திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும் நூல்களின் ஆசிரியர், காலம், அவற்றில் கூறப்படும் பொருள்மரபு முதலான தகவல்களைத் தேடித் தொகுப்பார்.<br>• மேற்கூறிய தமிழ்நீதி நூல்களிற் கூறப்படும் அறக் கருத்துக்களை இனங்கண்டு அவற்றை உதாரணங்களுடன் முன்வைப்பார்.<br>• மேற்கூறப்பட்ட இந்து அறவியல் நூல்களில் கூறப்படும் காலத்துக்குப் பொருத்தமான கருத்துக்களை இனங்கண்டு வாழ்வில் பின்பற்றுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 7.2 இந்து அற விழுமியங்களையும், பௌத்த அற விழுமியங்களையும் இனங்கண்டு எடுத்துரைப்பார். | • இந்து பௌத்த அறவிழுமியங்கள் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்துமதம் காட்டும் ஒழுக்க சிந்தனைகளுடன் ஒன்றித்த வகையிலேயே பௌத்த ஒழுக்க சிந்தனைகளும் காணப்படுவதை எடுத்துரைப்பார்<br>• பௌத்த உபதேசங்களில் தருமசீலங்கள், மனதை ஒரு நிலைப்படுத்தும் நெறி முறைகள், உபாசனை, தியானம் போன்றவை முக்கியத்துவம் பெறுவதை முன்வைப்பார்<br>• பௌத்தம் கூறும் பஞ்சசீலம், அட்டசீலம், தசசீலம் ஆகிய ஒழுக்கநெறிகள் இந்து சமயத்தின் யோகமார்க்கம் என்பதை ஆதாரம் காட்டுவார்.<br>• இந்துசமயம் பஞ்சமாபாதகச் செயல்கள் எனக் குறிப்பிடும் ஐந்து ஒழுக்கங்களையும் பௌத்தம் நாள்தோறும் கடைப்பிடிக்க வேண்டியவையாக முன்வைத்துள்ளதை அறிந்து விளக்குவார்.<br>• இந்து சமயத்தின் ஒழுக்கக் கோட்பாடுகளுக்கும் ஏனைய சமயங்களுக்குமிடையிலான தொடர்புகளை எடுத்துரைப்பார்<br>• இந்துசமய ஒழுக்க சிந்தனைகளைப் பௌத்த, அறக்கோட்பாடுகள் உள்வாங்கியிருப்பது பற்றி ஆதாரங்களை எடுத்துக்காட்டுவார்.<br>• இந்து அறவியல் சிந்தனைகளை பௌத்த அறக் கோட்பாடு களுடன் ஒப்பிட்டு ஆராய்வார் | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 8.0 இந்து சமுதாய வளர்ச்சியில் அரசியல், பொருளாதார, கல்விப் பாரம்பரியம் என்பன பெறும் இடத்தை ஆதாரங்களினூடாக விளங்கிக் கொள்வார் | 8.1 இந்து சமுதாய வளர்ச்சியில் இந்துக் கல்வி பெறும் இடத்தை ஆதாரங்களின் துணைக்கொண்டு எடுத்துக் கூறுவார். | • இந்து சமுதாய வளர்ச்சி<br>- இந்துக் கல்விப் பாரம்பரியம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• இந்து நாகரிக வரலாற்றில் இந்துக் கல்விப் பாரம்பரியம் மிகுந்த முக்கியத்துவம் உடையது என்பதை எடுத்துரைப்பார்.<br>• இந்துக் கல்விப் பாரம்பரியத்தின் சிறப்புக்களை அறிந்து கூறுவார்.<br>• இந்து நாகரிக வரலாற்றில் இந்துக் கல்விப் பாரம்பரியத்தின் வளர்ச்சியினைக் கால அடிப்படையில் ஆதாரங்களுடன் முன்வைப்பார்.<br>• இந்துக் கல்விக் கோட்பாட்டினை இனங்கண்டு எழுதுவார்.<br>• இந்துக் கல்விப் பாரம்பரியம் சமுதாய, ஆத்மீக சிந்தனையுடன் தொடர்புறுமாற்றை அறிந்து மதிப்பார்.<br>• இலங்கை பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழக மட்டத்தில் பாடத்திட்டத்தினூடாக இந்துக் கல்விப் பாரம்பரியம் பேணப்பட்டு வருகின்ற சிறப்பை எடுத்துரைப்பார்<br>• தற்காலத்தில் அறநெறிப்பாடசாலைகளூடாகவும் இந்துக் கல்விப் பாரம்பரியம் அரசின் அனுசரணையோடு பேணப்பட்டு வருகின்றமையை முன்வைப்பார் | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 9.0 இந்து அறிவியல் கால உணர்வுகளோடும், தேவைகளோடும் இணங்கியும் இசைந்தும் மனித வாழ்வை மேம்படுத்துமாற்றினை அறிந்து கொள்வார். | 9.1 இந்து அறிவியல் தொடர்பான சிந்தனைகள் இந்து வாழ்வியலுடன் கொண்டுள்ள தொடர்புகளை எடுத்துரைப்பார். | • **இந்து அறிவியல் ஓர் அறிமுகம்**<br>• இந்து வானியல்<br>• இந்து சோதிடவியல்<br>• இந்து மருத்துவம் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• அறிவியல் என்பதற்கான வரைவிலக்கணத்தைத் தெளிவாகக் குறிப்பிடுவார்.<br>• இந்து அறிவியல் அம்சங்கள் காலத்தால் முற்பட்டவை என்பதை உதாரணங்களுடன் முன்வைப்பார்.<br>• காலத்தால் முற்பட்ட இந்து அறிவியல் அம்சங்கள் ஏனைய நாடுகளிலும் பரவி உள்ளன என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கிக் கூறுவார்.<br>• இந்து அறிவியலில் அடங்கும் விடயங்களைப் பகுத்தும் தொகுத்தும் சான்றாதாரங்களுடன் முன்வைப்பார்.<br>• இந்து அறிவியலில் எமது முன்னோரின் அறிவியல் சிந்தனைகளின் பங்களிப்புகளை விளங்கி, மதிப்பளிப்பார்.<br>• இந்து அறிவியல் அம்சங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை விளங்கிச் செயற்படுவார்.<br>• இந்துக்களின் சமய வாழ்வுக்கும் சமய இலட்சியங்களை அடைவதற்கும் உரிய சாத்திரங்களாக வானியலும் சோதிடவியலும் அமைகின்றன என்பதை எடுத்துக்காட்டுவார்<br>• இந்துக்களின் மருத்துவம் காலம் காலமாக கட்டியெழுப்பப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட துறை என்பதை கால அடிப்படையில் எடுத்துக் காட்டுவார். | 60 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 10.0 இலங்கையில் இந்துசமய வளர்ச்சிக்கு ஊடகங்களின் பங்களிப்பினை ஆராய்ந்து வெளிப்படுத்துவார். | 10.1 இலங்கையில் இந்துசமய வளர்ச்சியில் ஊடகங்களின் பணியினை அறிந்து எடுத்துரைப்பார். | • ஊடகம் ஓர் அறிமுகம்<br>• இந்து சமய வளர்ச்சிக்கு ஊடகங்களின் பங்கு<br>• இந்துசமயமும் இணையத்தளமும் | **இப்பாட அலகைக் கற்ற பின்னர் மாணவர்கள்**<br>• ஊடகம் என்பதற்கான விளக்கத்தையும் உதாரணங்களையும் கூறுவார்.<br>• ஊடக வகைகளையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் அவை இந்து சமய வளர்ச்சியில் செய்துள்ள பங்களிப்புகளையும் வெளிப்படுத்துவார்.<br>• ஒவ்வொரு காலப் பகுதிகளிலும் வெவ்வேறு ஊடகங்களினால் இந்துப் பண்பாடு வளர்ச்சியடைந்து வந்துள்ளவாற்றை எடுத்துரைப்பார்.<br>• சமகாலத் தொடர்பாடல்கள் இந்து சமயத்தில் பெற்றுள்ள இடத்தை எடுத்துக்காட்டுக்களுடன் முன்வைப்பார்.<br>• இலங்கையில் இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்புகளை கால அடிப்படையில் ஒழுங்குபடுத்திக் கூறுவார். | 10 |

## 7.0 கற்றல் - கற்பித்தல் முறை

கற்றல் என்பது வாழ்க்கைக்குத் தேவையான அறிவு, அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதாகும். கல்விச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படும் மாணவர்களது அடைவு மட்டம், பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தலிலேயே தங்கியுள்ளது. பயனுறுதி மிக்க கற்றல் - கற்பித்தல் முறையினைத் தீர்மானிக்கையில் மாணவரிடம் உருவாக்கப்படும் கற்றல் பற்றிய கட்டுருவாக்கவியல் சிந்தனையில் உருவாகும் புதிய கருத்துக்கள், விடயங்கள் போன்றன பற்றித் தாமாக விளங்கிச் செயற்படும் ஆற்றலை, மாணவர்களிடம் கட்டியெழுப்புவதே இதன் பிரதான அடிப்படை நோக்கமாகும்.

மாணவர்களது வாழ்வியலுக்குத் தேவையான ஆக்கத்திறன், கற்பனைத்திறன், தொடர்பாடல் திறன் முதலானவற்றையும் ஒழுக்கம், விழுமியம், மனித உரிமைகள், ஆன்மீகம் என்பன சார்ந்த பண்புகளையும் விருத்தி செய்யக் கூடிய ஒரு கற்றல் முறையாகவும் இது அமைந்துள்ளது. குறிப்பாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றினூடாக மாணவர் நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான மாற்றமொன்றை இலக்காகக் கொண்டதாக இக்கற்றல் -கற்பித்தல் செயற்பாட்டினை மேற் கொள்ள வேண்டியுள்ளது. இந்து நாகரிகப் பாடத்தைப் பொறுத்தவரை முக்கியமாக எதிர்பார்ப்பது, மனப்பாங்கு விருத்தியும் நடத்தை மாற்றமுமாகும். குறித்த விடயங்களைச் சமூகத்திற்கு கொண்டுசெல்லும் வகையில் தேர்ச்சி மையக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை அமைந்துள்ளது.

தேர்ச்சியை மையமாகக் கொண்டமைக்கப்பட்ட க.பொத உயர்தர இந்துநாகரிக பாடத்திட்டத்தில், சமயம் சார் செயன்முறை அனுபவங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், இங்கு மாணவரின் செயற்பாடு, பங்கு பற்றல் மற்றும் சமூகத்திற்கு கொண்டு செல்லல் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தினூடாக மாணவர் அடையவேண்டுமென எதிர்பார்க்கின்ற குறைந்தபட்ச அடைவு மட்டத்தையேனும் அடையச் செய்வதற்கு உதவி செய்யவேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அத்துடன் மாணவரைச் சரியாக இனங்கண்டு, கற்றலுக்குத் தேவையான முறையான உபகரணங்களினூடாக அவர்களது அடைவு மட்டத்தை எய்துவதற்கு வழி காட்டுவது ஆசிரியரது கடமையாகும்.

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை நடத்துவதற்காகத் திறந்த உள்ளத்துடனும் போதிய திட்டமிடலுடனும் நிறைந்த கருத்துக்களை வெளிப்படுத்துபவராக இந்து நாகரிகம் தொடர்பான சந்தேகங்களை தீர்ப்பதற்கும் தயாராக வரவேண்டும். இங்கு உசாத்துணைகள் தரப்பட்டுள்ளன. தமது செயற்பாடுகளுக்கேற்ப திட்டமிட்டு மாற்றியமைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் உரிமையுடையோராவர்.

கற்றல் கற்பித்தல் செற்பாட்டினை விரிவாக்கும் போது அவை அமையக் கூடிய வகைகள் சில கீழே தரப்பட்டள்ளன.

- விவாதம்
- குழுக் கலந்துரையாடல்
- ஆய்வரங்கம்
- கருத்தரங்கு
- இலக்கிய கருத்துக்கள், விமர்சனங்களை கரந்துரையாடி முன்வைத்தல்
- சந்தேகத்திற்குரிய விடயங்கள் பற்றி ஆய்வு செய்தல்
- சமூகத் தேவைகள் கருதிச் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்
- வெளிக்கள விழிப்புணர்வு செய்றிட்டங்கள், சமூக நல்லிணக்கச் செயற்பாடுகள்

## 8.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

இந்து நாகரிகம் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், ஆற்றல் மிக்கோரை உருவாக்குவதற்கும், சமயக் கல்வியையும் அதன் பாரம்பரியத்தையும் வளர்த்தெடுப்பதற்கும் பொருத்தமான பின்னணியைப் பாடசாலைகளில் உருவாக்கத்தக்க வகையில், பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இயைபுபடுத்தப்படல் அவசியமாகும்.

இப்பாடத்தினூடாக, புதிய ஆக்கபூர்வமான சிந்தனையின்பால் வழிப்படுத்தப்படும். மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் பாடசாலை வேலைத் திட்டத்தை அமைத்துக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். இப்புதிய பாடத்திட்டத்தை பாடசாலையில் அமுலாக்கும் போது எமது சமய பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையில் பின்வரும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கமைக்கலாம்.

- குருபூசை, பாடசாலைச் சமய விழா முதலான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்து கொடுத்தல்
- சமய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- மாணவர்களின் ஒத்துழைப்புடன் கூட்டாகச் செயற்படக்கூடிய சைவசமய மன்றங்களை அமைத்து நடாத்துதல்.
- சமயம் தொடர்பான கல்விக் கண்காட்சிகளை வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் நடாத்த ஒழுங்கு செய்தல்
- பாடவிடயம் தொடர்பான முக்கிய இடங்களுக்கு வெளிக்கள, சமய சுற்றுலாக்களை திட்டமிட்டு, சரியாக நிறைவேற்றுதல்.
- ஒப்படைகள், செயற்றிட்டங்கள், புத்தாக்கங்கள், சஞ்சிகை வெளியிடுதல் போன்றவற்றில் மாணவர்களை ஊக்குவித்தல்
- வெவ்வேறு தலைப்புகளில் திட்டமிட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்றவற்றை நடாத்துதல்
- சமயக் கருத்தரங்குகள், சமய விழாக்கள், விழிப்பணர்வு செயற்றிட்டங்களை ஏற்பாடு செய்து நடாத்துதல்
- பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் பங்கு பற்றலுடன் சமூக நல்லிணக்கம், மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்து நடாத்துதல்
- மேற்கூறியவற்றினூடாக மாணவர்களின் பல்வேறு திறன்களும், மனப்பாங்குகளும் விருத்தியடையக் கூடிய வகையில் செயற்பாடுகளை வழங்கி செயற்படுத்தலாம்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கைகள், வேலைத்திட்டங்ளிலிருந்து சற்று விலகி, பாடசாலைக்கெனச் சிறப்பான கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். அதனை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காகப் பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் உதவிகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடத்திச் செல்வதற்காகத் தகைமை வாய்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியரை ஈடுபடுத்தலும் பயனுறுதிமிக்க நேரமுகாமையும் மிக அவசியம். அத்துடன் தரவிருத்தி உள்ளீடுகளைச் இந்துநாகரிக பாடத்திற்கும் பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு இந்துநாகரிகப் பாட ஆசிரியரும் தமது வகுப்பில் பயிலும் மாணவர்களைக் கீழ்வரும் நற்பழக்கவழக்கங்களை உடையவர்களாக ஆக்குதல் வேண்டும்.

| | |
|---|---|
| - கடவுள் பக்தி | - தாய், தந்தை, குரு ஆகியோரைத் தினம் தினம் வணங்குதல் |
| - மூத்தோரிடம் மரியாதை | - ஒழுக்கம் |
| - தியாகமும், தொண்டும் | - சமய அறிவில் ஆர்வம் |
| - ஆன்மீகத்தில் ஈடுபாடு | - சைவ தர்ம நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல் |

மாணவர்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் ஆக்குவதை ஆசிரியர்கள் இலட்சியமாகக் கொண்டு செயற்படல் வேண்டும். பாடசாலைகளில் இக்கலைத்திட்டத்தை மேற்குறிப்பிட்டவாறு நடைமுறைப்படுத்துவதனால் அடுத்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளைக் கொண்ட புத்தாக்கம் புரிவோரையும் மனிதப் பண்புள்ளவர்களையும் குறைவின்றி உருவாக்கலாம் என்பதில் ஐயமில்லை.

## 9.0 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினூடாக, மாணவர் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடைந்துள்ளனரா என்பதை அறிவதற்கு ஏற்ற இலகுவான வழிமுறைகளாக கணிப்பீடும் மதிப்பீடும் அமைந்துள்ளது. மாணவரின் நடத்தைசார் பண்புகள், சமய வழிபாடுகளில் அவர்கள் கொண்டுள்ள அக்கறை, சமய, சமூக செயற்பாடுகளில் காட்டும் ஆர்வமும் ஈடுபாடும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின்போது வெளிக்காட்டும் தன்மை, பங்கேற்கும் தன்மை என்பன கணிப்பீடு செய்யப்பட வேண்டும். இவற்றை முறை சார்ந்த வழிகளில் வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் கணிப்பீடு செய்ய முடியும்.

மதிப்பீட்டினைப் பல வழிகளில் மேற்கொள்ள முடியும். பாடம் தொடர்பான மதிப்பீடு பாட அலகின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது, வாய்மொழிப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை, செயற்றிட்டம் போன்ற செயற்பாடுகளினூடாக மேற் கொள்ள முடியும். தவிர, தவணை இறுதியில் ஒப்படை, செயற்றிட்டங்களை வழங்குதல் என்பவற்றினூடாகவும் மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியும்.

இப்பாடத்திட்டமானது தரம் - 13 இன் இறுதியில் இடம்பெறுகின்ற தேசிய மட்டக் கணிப்பீடான, க.பொ.த உயர்தர பரீட்சைக்குரியதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் மூலம் தேசிய மட்டத்தில் நடாத்தப்படுகின்ற முதலாவது பரீட்சை 2019 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்தின் அமைப்பு, மாதிரி பற்றித் தெளிவான விபரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும். இவற்றுக்கு ஏற்ற மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளை முன்கூட்டியே தயாரித்துக் கொள்ள வேண்டும்.